கெப்பாசிடி இருக்கிறது என்ற தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். எது உண்மை என்பதை நாம் சட்டமன்றத்திலே உண்மையைச் சொல்ல வேண்டுமென்பதற்காகப் பாடுபடுகிற நிலைமையிலே—மாண்புமிகு உறுப்பினர் என்னிடத்திலே தகவல் கொடுத்திருக்கிறார்கள். உறுப்பினர் கொடுத்து இருக்கிற காரணத்தினால், பொறுப்பு வாய்ந்ததாக இருப்பதால், இரண்டையும் நானே போய்ப் பார்க்கிறேன் என்பதை வாக்குறுதியாக நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்—சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1983.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்—சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: ''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதிகோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.